உ

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் விரோதி ஞூ ஆவணி மீ 26 ஆம் உ
(1889)

பிரதி விலை: 10 ரூபா
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது,

# இந்து சாதனம்

(HINDU ORGAN)

புத்தகம்: 110 பிரமாதி வருடம் ஆனித் திங்கள் 14 ஆம் நாள்
( 28-06-1999 ) ஆனிப் பூரணை இதழ்: 3

உ

### நாவலர் மாணவ பரம்பரையின் கடைசி வாரிசு

# பண்டிதமணி

# நூற்றாண்டு நிறைவு வைபவம்

**நாவலர் பெருமானின் அடியொற்றி வாழ்ந்த, நாவலர்பெருமானின் மாணாக்கர் பரம்பரையில் கடைசி வாரிசாக விளங்கிய இலக்கியகலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களது பிறந்ததின நூற்றாண்டு நிறைவு வைபவ அங்குரார்ப்பண விழா யூன் மாதம் இருபத்தேழாம் நாள் வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. விழாவைப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை ஏற்பாடு செய்திருந்தது.**

விழா ஆரம்பத்தில் வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுப் பண்டிதமணியின் திருவுருவப்படம் ஊர்வலமாக நாவலர் மகாவித்தியாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பண்டிதை பொன். பாக்கியம் அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களது வரவேற்புரையைத் தொடர்ந்து பண்டிதை பொன். பாக்கியம் அவர்கள் தனது தலைமையுரையில் பண்டிதமணியின் சமய இலக்கியப் பணிகளை நிறைவு கூர்ந்தார்.

பேராசிரியர் நா, சுப்பிரமணியன் அவர்களின் ''பண்டிதமணியின் இலக்கிய நோக்கு'' பற்றிய சொற்பொழிவு விழாவின் சிறப்பம்சமாக அமைந்திருந்தது.

தாம் வாழ்ந்த எண்பத்தேழு ஆண்டுகளில் சைவ சமய வளர்ச்சிக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பண்டிதமணி செய்த சேவைகள் அளப்பரியது. அவரது எழுத்தும் பேச்சும் சாதனையும் 'பண்டிதமணி' என்றால் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையே என்ற நிலையை இயற்கையாகவே ஏற்படுத்தியது; ஈழத்தில் எந்தவொரு பண்டிதருக்கும் கிடைக்காத பெயரையும் புகழையும் பண்டிதமணிக்குச் சேர்ப்பித்தது.

பிரமச்சரியம் பூண்டு தமது வாழ்வை முழுமையாகச் சைவ சமயத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் அர்ப்பணித்தவர் பண்டிதமணி அவர்கள். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை ஆசிரியப்பணி மூலம் பல்லாயிரக் கணக்கான நல்லாசிரியர்களைத் தோற்றுவித்தார். ஆசிரியப் பணியோடன்றி உலகெலாம் மேன்மை கொள் சைவ நீதி விளங்க அவர் ஆற்றிய சமயப் பிரசங்கங்கள், சைவசமய உண்மைகளைத் தெளிவுபடுத்திய விருத்தியுரைகள், வியாக்கியானங்கள் எல்லாம் இன்று சைவசித்தாந்த மரபிற்கு அரணாக அமைத்துள்ளன. நாவலர் பாரம்பரியத்தைப் படிமுறையாக விளக்கஞ் செய்த அவரது பணி சைவசித்தாந்த மரபிற்கு மெருகூட்டியது.

ஈழத்துச் சைவசமய வளர்ச்சி பற்றி எழுதக் கூடியவொரு நூலில் ''ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை'' என்றொரு பெரிய அத்தியாயம் இடம் பெறும்.

பண்டிதமணி வாழ்ந்து காட்டிய வழியில் தமிழ் சைவ மரபுகளைப் பேணிக் காப்பது நமது கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் மகிமை

— சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம், B. A. அவர்கள்

*இரண்டாம் அத்தியாயம்*

## சைவத் திருநூல்கள்

வேதங்களும், சைவாகமங்களும் இறைவனால் அருளிச்செய்யப்பட்டவையாகச் சைவசமயத்தவர்களால் கொள்ளப்படுகின்றது. இவை மானிடப் புத்திக்கு உட்படாத உண்மைகளைக் கொண்டுள்ளன. ஆகவே இவை இறைவனால் அருளிச் செய்யப்பட்டனவாக நம்பப்படுகிறது. திருமூலர், மாணிக்கவாசகர், தேவார காரர், அருள்நந்தி போன்ற ஞானிகள் இவை இறை வனால்[1] அருளிச்செய்யப்பட்டதாகக் கூறியுள்ளனர். ஒவ்வொரு சமயமும் தத்தமக்குரிய புனித நூல்களைக் கொண்டுள்ளன. அவை இறைவனிடமிருந்து அல்லது ஞானிகளிடம் இருந்து கிடைத்ததாகக் கொள்ளப்படு கின்றன. கிறிஸ்தவர்களுக்கு வெளிக்கொணரப்பட்டது பைபிள் எனவும் முஸ்லிம்களுக்கு அருளப்பட்டது குரான் எனவும் பௌத்தர்களுடையது திரிபிடகம் எனவும் அழைக்கப்படுகின்றது. பைபிளின் புனிதத்தை மறுப் பவன் கிறிஸ்துவன்எனவும் குரானின் புனிதத் தன்மையை ஏற்காதவன் முஸ்லிம் எனவும் கொள்ளப்படாமைபோல, வேதங்களினதும் சிவாகமங்களினதும் உச்ச அதி காரத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒருவன் சைவன் எனக் கொள்ளப்படமாட்டான்.

வேதங்கள் வேறு பல (இந்திய) சமயங்களுக்கும் கட்டுப்படுத்தும் நூலாதலாலும், அவற்றை வாசிக்கும் உரிமை அவர்களெல்லோருக்கும் உண்டாதலாலும் அவை இன்றும் உயிர் வாழ்கின்றதோடன்றி ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குக் கூடச் சென்றுள் ளன. ஆனால் சைவாகமங்கள் சைவர்களால் மட்டுமே புனிதமானதாகக் கொள்ளப்படுவதாலும் இறுதித்தீக்ஷை யைப் பெற்றவர்களுக்கு மட்டுமே கிட்டவேண்டும் என்ற கட்டுப்பாடு இருப்பதாலும் அவை மறைந்து விட்டன. பெரும்பாலானவை கடந்த இரண்டு நூற் றாண்டு காலத்திற்குள்ளேயே மறைந்தன போல் தெரி கிறது. இருநூறு வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த சிவஞான முனிவர் என்பவர் தனது வியாக்கியானங் களில் சிவாகமங்களை உசாத்துணையாகக் கொண்டுள்ள போதிலும் அந்நூல்கள் எவையும் அழிந்து போனதாக முறையிடவில்லை. கடந்த நூறு ஆண்டுகளில் ஆங்கிலக் கல்வி புத்தி ஜீவிகளுள் சிறந்தவர்களைக் கவர்ந்தமை யால், சைவாகமங்களைக் கற்க யாருமில்லாதுபோயிற்று. அதனால் அவை ஒன்றில் தூக்கி வீசப்பட்டிருக்க வேண்டும் அல்லது கறையானுக்கு இரையாகியிருக்க வேண்டும்.

நாம் செய்த தவப்பயனால், சிவாகமங்களின் கிரியைப் பகுதி எமது குருமாரின் கரங்களில் பாதுகாப் பாக உள்ளன. ஞானப்பகுதி தமிழ் ஞானிகளால் தமிழில் எமக்குக் கையளிக்கப் பட்டுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு[2] மேலாகச் சீவிதராக இருந்தவரென அறியப்படும் திருமூலர் தனது திருமந் திரத்தில் சைவாகமங்களின் ஞானப்பகுதியின் சில பகுதி களைத் தந்துள்ளார். சிவஞானபோதம் உரோருவ ஆகமத்தின் ஒரு பகுதி. அத்துடன் இதன் சாரமே பதினைந்து[3] நூற்றாண்டுகளுக்குமுன் பரமாச்சாரியாரால் மாணிக்கவாசகருக்கு உபதேசிக்கப்பட்டது. அவர் சிவ ஞானபோதத்தில் கூறப்பட்டுள்ள சிலவற்றைத் தமது திருவாசகத்தில் மீளக்கூறியுள்ளார். இதே சிவஞான போதத்தைப் பரஞ்சோதி முனிவர் மெய்கண்ட தேவ ருக்கு அருளிச்செய்து அவரை அதைத் தமிழில் மொழி பெயர்க்குமாறு கேட்டுக்கொண்டார். குருவினது கட்ட ளைக்கமைய மெய்கண்டதேவர் அதனைத் தமிழில் மொழி பெயர்த்ததுடன் சில குறிப்புகளையும் சேர்த் துள்ளார். இதனால் சிவாகமங்களின் சாரமான சிவ ஞானபோதம் எமக்குத் தமிழில் கிடைத்திருக்கின்றது. சிவஞானபோதத்தை மெய்கண்டதேவர் தமது சீடரான அருள்நந்திசிவத்திற்கு உபதேசித்து அவரைச் சிவஞான போதத்தை விரித்து அதனை ஒரு பூரணத்துவமான ஆகமப் படைப்பாக ஆக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆகவே அருள்நந்திசிவம் ஆகமங்களிலிருந்து நியாய மானவளவு செய்திகளைச் சேர்த்து சிவஞானபோதத்தை விரிவுபடுத்தி அதற்கு சிவஞானசித்தியார் எனப் பெய ரிட்டார். சிவஞானசித்தியாருக்கு வியாக்கியானம் செய் தவர்கள் சித்தியாரில் காணப்படும் பல உண்மைகளை அந்தப்படியே கொண்டுள்ள 17 சிவாகமங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். சித்தியாருக்கு அனுபந்தமாக அருள்நந்தி என்பார் இருபா இருபஃது என்னும் நூலை ஆக்கினார். ஆகவே எமது ஆகமங்கள் மெய்கண்டார், அருள்நந்தி ஆகியோரது ஆக்கங்கள் மூலம் எமது

(3ம் பக்கம் பார்க்க)

## இருபோதும் இறைஞ்சிடுவேன்

"தேன் ஊறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கை நிகர் மாணிக்கவாசகனை
யான் ஊறு படாத வகை இருபோதும் இறைஞ்சிடுவேன்"

— செவ்வந்திப் புராணம்.

**மாணிக்கவாசகர் குருபூசை**

பிரமாதி வருடம் ஆனித்திங்கள் 32 ல் (16-07-1999) வெள்ளிக்கிழமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் மகிமை

(2ம் பக்கத் தொடர்ச்சி)
சொந்த மொழியில் பாதுகாப்பாக உள்ளன. ஆகம உண்மைகளைத் தேவாரங்களிலும் காணலாம். அருள் நந்தி சிவத்தின் சீடரின் சீடரான உமாபதிசிவம் சிவாகம உண்மைகள் சிலவற்றைக் கொண்டுள்ள சிவப்பிரகாசம், திருவருட்பயன் போன்ற எட்டு ஆக்கங்களை எழுதிய தாகச் சொல்லப்படுகின்றது. மெய்கண்டாருக்கு முந்திய மூன்று ஞானிகள் திருவுந்தியார், திருக்களிற்றுப்படி யார், உண்மை விளக்கம் ஆகிய மூன்று நூல்களை இயற்றியுள்ளனர். இந்தப் பதினான்கு சாஸ்திரங்களும் இப்போ மெய்கண்ட சாஸ்திரங்கள் என அழைக்கப் படுகின்றன. இவற்றுடன் சிவதர்மோத்திரம், சதாசிவ ரூபம் எனும் இரண்டையும் சேர்த்துக் கொள்ளலாம். சிவதர்மோத்திரம் சிரவக்த ஆகமத்திலிருந்து வருவிக் கப்பட்டது. சதாசிவரூபம் வாதுள ஆகமத்தின் ஒரு பகுதியின் தமிழாக்கம்.

வேதங்களும் ஆகமங்களும் சமஸ்கிருதத்தில் உள் ளன. சமஸ்கிருதமே சாஸ்திர உண்மைகளைத் தெரி விக்கும் இந்தியப் பொதுமொழியாக இருந்தது[4]. எவ்வாறு சமஸ்கிருதம் முழு இந்தியாவுக்கும் பொதுமொழியாக விருந்ததோ அது போன்றே வேதங்களும் இந்திய மதங்கள் அனைத்திற்கும் பொதுவாயமைந்த இறைவ னால் அருளப்பட்ட முதல் நூல்களாகவிருந்தது. வேதங் கள் இறைவனால் அருளப்பட்டவைகளாகச் சைவர்கள், வைணவர்கள், சாக்தர்கள் போன்ற இந்திய மதத்தவர் களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மதத்தி னரும் தத்தமது ஆகமங்களில் உள்ள சித்தாந்தங்களுக்கு அமைவாகவிருக்குமாறு வேதங்களை வியாக்கியானம் செய்து கொண்டனர். வேதங்கள் முறையே கிரியைகள், வழிபாடு, உண்மைகள் (கன்ம, உபாசன, ஞான) ஆகிய விடயங்களுடன் சம்பந்தப்பட்ட மூன்று கூறுகளைக் கொண்டுள்ளன. கிரியைகளிற்கும் வழிபாட்டிற்கும் உப யோகிக்கப்பட்ட உரு தீ (சிவாக்கினி) ஆகும்.

ஆகமங்கள் நான்கு கூறுகளைக் கொண்டுள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானம். சடங்குகளில் (கிரி யைகளில்) ஆகமங்களுக்கிடையே சிறிய வேறுபாடுகள் உள்ளதாக சிவஞான முனிவர் கூறுகிறார்.[5] இவை காலத்திலும் ஆன்மாக்களின் திறனிலும் உள்ள வித்தி யாசங்களால் ஏற்பட்டவை. ஆனால் உண்மைகள் சூழ் நிலையில் தங்கியிருக்காதாகையின், ஞானப்பகுதியில் எதுவித வேறுபாடுகளும் இருக்க முடியாது. ஆகமங் களில் விதிக்கப்பட்டுள்ள சடங்குகள் உடனடி உபயோ கத்திற்கும் விடயங்களை விளங்கிக்கொள்ள உசாத்துணை யாக இருப்பதற்காகவும் பத்ததிகளாக ஒழுங்குபடுத்தித் தொகுக்கப்பட்டுள்ளன. ஆகமங்களின் சரியைப் பகுதி யும் கிரியைப்பகுதியும் இந்தப் பத்ததிகளில் பாதுகாப் பாக உள்ளன.

மாணிக்கவாசகரின் திருவாசகம் இறைவன் புகழ் பாடுவதும் தத்துவமுமாகும். அது 658 பாடல்களைக் கொண்ட 51 பதிகங்களையுடையது. ஒவ்வொரு பதிக மும் போதிக்கும் தத்துவம் அப்பதிக ஆரம்பத்தில் இருக்கும். உயர்ஞான அறிவுப் பேற்றைப் பெறாததால் இப்பதிகங்களில் உள்ள தத்துவ உண்மைகளைக் கண்டு பிடிக்கமுடியாமல் உள்ளது. எம்மால் ஆகக்கூடியதாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருப்பது அப்பதிகங்களின் சொற்பொருள் அளவிலான - ஆழமற்ற - மேற்பரப்பள விலான - கருத்துக்களை அறிந்து கொள்வதுதான். ஆனால் அதுவே எமக்கு எல்லையற்ற பெறுமதியுடை யது. திருவாசகப் பாடல்கள் இறைவனின் கருணை யில் மெய்சிலிர்க்க வைப்பதுடன் ஓதுபவர்களினதும் கேட்பவர்களினதும் நெஞ்சை உருக்குவன. ''திருவாச கத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என் றொரு முதுரை உண்டு. திருவாசகத்தைப் படிக்கும் சந்தர்ப்பம் கிட்டிய தனது மதத்தில் உறுதியும் ஆர்வமு முள்ள கத்தோலிக்க மாணவன் ஒருவன் திருவாசகம் வாசித்ததன் காரணமாக சைவசமயத்தவனாக மாறி னான்.[6] ஆக்ஸ்போட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜி. யூ போப் என்பவர் கிறிஸ்தவராக இருந்த போதிலும் திருவாசகத்தின் பெரும் பெறுமதியைக் கண்டு, அதனை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தார். திருவாசகம் இறைவனின் உருவாகவே கொள்ளப்படு கின்றது. பல சைவர்கள் திருவாசகத்தை நடராஜப் பெருமானாகவே கொண்டு அதற்கு பூசனை புரிகிறார் கள். திருவாசகம் சைவர்களின் அதி மகிமை மிக்க சொத்துக்களில் ஒன்று. சொர்க்கத்தில் திருவாசகம் இல்லாது வாழ்வதைவிட இப்பூமியில் திருவாசகத்தோடு வாழ்வது சிறந்தது.

காலக்கிரமப்படி அடுத்து வருவது தேவாரங்கள், இவை அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியவர்களின் ஆக்கங்கள். இவை திருவாசகத்தை விட அதிகளவு பதிகங்கள் உடையவை. பெயர் தெரியாத ஞானி யொருவர் இருபத்தைந்து பதிகங்களுக்கு அவை கையாளும் சித்தாந்தக் தத்துவத்தைத் தலைப்புகளாகக் கொடுத்துள்ளார். இவ்விருபத்தைந்து பதிகங்களும் அகத் தியர் தேவாரத்திரட்டு எனப்படும். ஏனைய பதிகங்கள் ஒவ்வொன்றும் ஏதோவொரு சித்தாந்தக் கருத்தைப் பற்றிப் பேசுகின்றனவா என்பதனை நாம் கூறக்கூடிய நிலையில் இல்லை. (ஆழமற்ற) மேலெழுந்த வாரியான (சொற்பொருள்) கருத்துக்களே எமக்குப் பெரும் பெறு மதியுடையன. ஆனால் தத்துவ உண்மைகளையும் மேலெழுந்த வாரியான உண்மைகளையும் விட தேவாரங் களில் உள்ள இறைவனது அருளே எமக்கு எல்லையற்ற

(4ம் பக்கம் பார்க்க)

## ஆலயத்தை வலம் வருவதன் பயன்கள்

| | | |
|---|---|---|
| காலையில் வலம் வருதல் | — | நோய் நீங்கும் |
| மாலையில் வலம் வருதல் | — | எல்லாப்பாவமும் நீங்கும் |
| பகலில் வலம் வருதல் | — | விருப்பம் அளிக்கும் |
| அர்த்தசாமத்தில் வலம் வருதல் | — | மோட்சசித்தி உண்டாகும் |
| விநாயகருக்கு | — | ஒருமுறை வலம் |
| சூரியனுக்கு | — | இரண்டுமுறை வலம் |
| சிவனுக்கு | — | மூன்றுமுறை வலம் |
| அம்பாளுக்கு | — | நான்குமுறை வலம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் மகிமை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மிக அதிகப் பெறுமதியுடையது. இது பக்தியுள்ள ஒவ்வொரு பாடகனுக்கும் - படித்தவர்களாயினும் சரி படியாதவர்களாயினும் சரி - கிடைக்கிறது. அது அவனைத் தேற்றுகிறது. ஒரு மருந்தில் சேர்க்கப்பட்டுள்ள பொருட்களின் குணங்களை மட்டுமல்லாது அவற்றின் பெயர்களைத் தானும் அறியாதிருந்தாலும், ஒரு நோயாளி எவ்வாறு அம்மருந்தின் முழுப்பயனையும் பெறுவானோ அது போன்று தேவாரப் பதிகத்தின் தத்துவக் கருத்தையோ அன்றி மேலெழுந்த வாரியான சொற்பொருளையோ அறியாது தேவாரங்களை ஓதுபவனும் பயனைப் பெறுகின்றான்.

தேவார, திருவாசகங்களில் குறைந்தது பத்துப் பதிகங்களைத் தானும் படித்திராத சைவசமயத்தவன் ஒருவன், தான் சைவனாகப் பிறந்ததை நியாயப்படுத்த முடியாது. சைவசமயத்தவன் ஒருவன் முழுத் திருவாசகத்தையும் அல்லது ஏறத்தாழ ஐம்பது தேவாரப் பதிகங்களைப் படித்திருப்பானாயின் அவன் தன்னைப் பற்றி பெருமைப்பட முடியும். பட்டினத்தார், தாயுமானவர் போன்ற வேறு சில ஞானிகளின் பாடல்களும் புனிதமானவையாகக் கொள்ளப்படுகின்றன.

இவற்றிற்குப் பின் புராணங்கள் வருகின்றன. ஆனால் இவை அதிகாரப்பாங்கானவைகள் அல்ல. அவை புராணப் போர்வையும் இலக்கியப் புலமைப் போர்வையும் உடையவை. ஆகவே அவற்றிலுள்ள உண்மைகளைக் கண்டுபிடிக்கு முன்பு இப்போர்வைகள் களையப்பட வேண்டும். மெய்யறிவுடைய மனிதர் புராணங்களிலுள்ள உண்மைகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமெனக் கந்தபுராண ஆசிரியர் கூறுகிறார். அவர் எதைக் கூறுகிறாரெனில் உண்மைகள் புராணங்களின் மேற்பரப்பில் எப்போதும் இருப்பதில்லை என்பதாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கந்தபுராணத்தில் விபரிக்கப்பட்டுள்ள மூன்று திருமணங்களில் எதுவுமே எப்போதாயினும் நடந்ததல்ல என்றும் அவை பிரபஞ்சம் படைக்கப்பட்ட போது சக்தியின் வெளிப்பாட்டைக் குறிப்பன வென்றும் கூறி, இப்பகுதிகளைச் சொற்பொருட்படி வியாக்கியானம் செய்பவர்கள் அவற்றைக் கேட்பவர்களுடன் நரகம் புகுவார்கள் எனவும் கூறுகிறார்.

சாஸ்திர உண்மைகளுக்கு அமைவாக இல்லாத புராணக் கதைகள் தத்துவ அடிப்படையில் வியாக்கியானஞ் செய்யப்படல் வேண்டும் அல்லது ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

ஒருவர் தேங்காயைச் சாப்பிட வேண்டுமாயின், அதன் மட்டையையும், சிரட்டையையும் அகற்ற வேண்டும். எவரும் மட்டையை உண்ணக்கூடிய பகுதியாகக் கருதி அதைக் கடிப்பதில்லை.

ஆனால் அருவருப்பான அழுக்குகளையும், பகிடிகளையும் தாராளமாகக் கொண்டுள்ள, புராணங்கள் எனப் பிழையாகப் பெயரிடப்பட்டுள்ள எம்மால் கைவிடப்பட்ட நூல்கள் உண்டு.

* இரண்டாம் அத்தியாயம் முற்றுப் பெற்றது.

* அடுத்த இதழில் திருநீறு பற்றிய மூன்றாவது அத்தியாயம் வெளிவரும்.

---

1. ஆன்மாக்களுள் தூய்மையான வகுப்பைச் சேர்ந்த விஞ்ஞானகலர் என்போரை இறைவன் (ஞானப்) பிரகாசம் அடைய வைத்ததாகச் சொல்லப்படுகிறது. அதனால் இவர்கள் உண்மையைக் காணக் கூடியதாயிற்று. வேதங்களும் சிவாகமங்களும் கொண்டுள்ள உண்மைகளே இவை. இவற்றை இவ்வான்மாக்கள் பிரளயாகலர்கள் வகுப்பைச் சேர்ந்த ஆன்மாக்களுக்குப் போதிக்க, அவர்களிட மிருந்து நிர்வாண தீட்சைக்குத் தகுதியுள்ள தகுதிவாய்ந்த ஆன்மாக்களெல்லோருக்கும் பரவியது.
2. இத்திகதிகள் நம்பிக்கைக்குரியவையல்ல.
3. இத்திகதிகள் திருத்தமானவையல்ல.
4. தமிழ் மொழி எவ்வளவுக்கு எமது மொழியோ அவ்வளவுக்கு சமஸ்கிருதமும் எமது மொழியே. சமஸ்கிருதம் எப்பொழுதாவது பேச்சு மொழியாக இருந்ததில்லை என்பது நினைவில் வைத்திருக்க வேண்டியது. வட இந்தியாவின் பேச்சு மொழி பிராகிருதம்.
5. சிவஞான பாஷ்யம் பக்கம் 9, பால்வண்ணப் பிள்ளையின் பதிப்பு.
6. அவர் தற்போது (1953 ஆம் ஆண்டில்) இலங்கை அரசாங்க சேவையில் உயர்பதவியொன்றை வகிக்கிறார்.

---

## சைவசமயப் பெருநாள்கள்

### (ஆனிப் பூரணை முதல் ஆடிப் பூரணை வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனி | 14 உ | (28-06-99) | திங்கள் | பூரணை |
| | 18 உ | (02-07-99) | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |
| | 25 உ | (09-07-99) | வெள்ளி | கார்த்திகை |
| | 26 உ | (10-07-99) | சனி | சனிப்பிரதோஷம் |
| | 28 உ | (12-07-99) | திங்கள் | அமாவாசை |
| | 32 உ | (16-07-99) | வெள்ளி | சதுர்த்தி, மாணிக்கவாசகர் குருபூசை |
| ஆடி | 01 உ | (17-07-99) | சனி | மாதப்பிறப்பு |
| | 02 உ | (18-07 99) | ஞாயிறு | குமாரசஷ்டி |
| | 09 உ | (25-07-99) | ஞாயிறு | பிரதோஷம் |
| | 12 உ | (28-07-99) | புதன் | பூரணை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நாவலர் வழியிற் சைவம்

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உலகில் தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்வோர் ஒரு சிலரே. இத்தகையோராலேயே உலகம் நிலை பெற்றுள்ளது என்பர் ஆன்றமைந்த அறிவினை உடையோர்.

''பண்புடையார்ப் பட்டுண்டுலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

என்ற திருக்குறள் அடிகள் இதற்குச் சான்றாகும். இத்தகைய தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் வரிசையில் ஒருவராக விளங்கியவர்தான் சைவச் சான்றோனாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். நாவலர் சைவசமயத்திற் கொண்டிருந்த அளவற்ற பற்றும் சைவப்பணியாற்றுவதில் அவர் கொண்டிருந்த திறனும் அவரைச் சிறந்ததொரு சைவசமயக் காவலனாக உலகிற்கு அறிமுகஞ் செய்ய உதவின. வேத சிவாகமங்கள், திருமுறைகள், பெரியபுராணம், கந்தபுராணம் ஆகிய சமய நூல்கள் காட்டிய சைவசமய நெறிகளை அனுசரித்து வழிநடத்திச் சென்ற பெருமை நாவலரைச் சாரும். இச் சமய நூல்கள் கூறும் சமய விழுமியங்களை மாறுபடாவண்ணம் உலகிற்கு எடுத்துரைப்பதில் அவர் வல்லவராக விளங்கினார். சைவத்தைப் பாதுகாக்க முன்வருபவர்கள் நாவலரையே முன் உதாரணமாகக் கொள்ளல் தகும் எனக் கூறக் கூடிய வகையில் அவரது சைவப்பணி அமைந்தது. இளைஞர்களையும், மக்களையும் சைவசமய உணர்வுடையவர்களாகச் செய்ய வேண்டும் என்னும் கருத்துடன் அவர் எழுதி வெளியிட்ட நூல்கள், உருவாக்கிய சைவப்பாடசாலைகள் அவரது சமயப்பணிக்கு உரைகல்லாக விளங்குகின்றன.

யாழ்ப்பாணத்திலே இன்று நாவலரது பெயரால் எத்தனையோ சமய நிறுவனங்கள் சமயப்பணியாற்ற முன் வந்துள்ளன. இம்முயற்சிகளை நாம் அவதானித்தால் சைவசமயம் நாவலர் வளர்த்த மரபில் வீறு நடை போடுகின்றது என்று நிறைவு பெறலாம். நாவலர் சிறந்த சைவசமயச் சிந்தனையாளர் என்பதோடு ஆழ்ந்த புலமையாளருங் கூட எனக் கூறின் மிகையில்லை. தமது காலத்தில் சிறந்த சைவப்பணியாற்றித் தமக்குப்பின் சைவ மரபு நிலை பிறழாது மேன்மையடையும் வண்ணம் உரிய வழி வகுத்தவர். செந்தமிழும் சைவமும் தழைத்திருக்கு மட்டும் ஆறுமுகநாவலரின் நாமமும் வாழ்ந்திடும் எனக் கூறுமளவிற்கு அவர் சைவசமயத்தை உரிய வழியிற் பேணிப்பாதுகாத்தார். அவரது தீர்க்க தரிசனம் இப்பணி மேன்மையடைய உதவியது. சைவர்களது உள்ளங்களிலே அவரது ஞானத்திருவடிவம் அணையா சோதியாய்ப் பிரகாசித்தது. சைவசமய இலக்கியங்களைச் சைவ மறுமலர்ச்சிக்காக தமது சாதனங்களாகப் பயன்படுத்தியவர் நாவலர். இவற்றின்பெருமை போன்று சைவங் காத்த நாவலரின் பெருமையும் ஓங்கியது.

நாவலரோடு நேரடித் தொடர்பு கொள்ளாதவர்கள் கூட அவரது வழியைப் பின்பற்றக்கூடிய வகையில் அவரது நூல்கள் அத்தொடர்பினை ஏற்படுத்தித் தருகின்றன. நாவலர் வாழ்க்கையை எவ்வாறு நோக்கினார்? வாழ்க்கையைப் பற்றி அவரது விளக்கம் யாது? ஆகிய வினாக்களுக்குரிய விடையே நாவலரின் ஆளுமையைக் காட்டி நிற்கும். சிறுவர்க்கென அவர் எழுதிய இரண்டாம் பாலபாடத்தில் இவற்றுக்குரிய விடையைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் தந்துள்ளார்.

''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை
வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்''

என்ற அவரது கூற்றில் சைவசித்தாந்த விழுமியப் பொருள் பொதிந்துள்ளது. இது பற்றிக் குறிப்பிடும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை 'இந்த வசனம் வேதசாரம்; சாத்திரசத்து; புராணநிதியம்; பெறுபேறு; என விதந்து போற்றுகின்றார்.

இளஞ்சிறார்களிடையே சைவத்தின் சிறந்த கருத்துக்களைப் போதிப்பதற்காக அவர் எடுத்த முயற்சிகள் போற்றற்பாலன. தெளிவான உரைநடை நூல்களை வெளியிட்டார். இவ்வரிசையில் சைவ வினா விடை போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இன்று எமது பிரதேசத்தில் சைவம் சிறப்புடன் மிளிர்கின்றதென்றால் அன்று நாவலர் செய்த தொண்டே காரணமாகும். எனவே எமது நாட்டில் வாழ்ந்து எமது சமய விழுமியங்களை உலகறியச் செய்த நாவலரது பெருமையை இளந்தலைமுறையினர் அறிந்து அவர் வகுத்த சமய ஒழுக்கத்தின்படி இயன்றவரை வாழப்பழகுதல் அவசியமானதும் காலத்தின் தேவையுமாகும். சமயக் கல்வி பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை வளர்ச்சி கண்டுள்ள இற்றை நாளில் அதற்குரிய அடிப்படைகளை நாம் நாவலர் வழியிற் சிந்தித்துச் செயற்படுதல் பயன் தருவதாக அமையும்.

முறையான சைவ மரபின்படி மக்கள் வாழவேண்டுமென்பதை எடுத்துக்கூறி அதற்குரிய விளக்கங்களை அளிப்பதையே தமது வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டார். அச்சமய நோக்கம் வெற்றி பெற அயராது பாடுபட்டார். குறிக்கோளை வைத்துக்கொண்டு முயலும் ஒருவனது சிந்தனை, சொல், செயல் ஆகிய யாவும் அந்த ஒன்றினையே சுற்றி வரும். அவ்வாறே இம்மூன்றும் நாவலரைப் பொறுத்தவரை அந்நோக்கத்தையே கொண்டிருந்தன. சமயம் பற்றிச் சிறப்பாக எழுதியநாவலர் சொல்லின் அருமையையும் சொல்லும் பொருளின் பெருமையையும் அறிந்து எழுதியவர் சைவசமயி என்ற தலைப்பில் சைவ வாழ்வுக்கு இன்றியமையாத பன்னிரண்டு அம்சங்களைத் தெளிவுபடக் கூறியுள்ளார். (ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, 1996 பக். 90)

விபூதி தரிப்பது மாத்திரமே சைவசமயிகட்கு இலக்கணம் என்று அநேகர்எண்ணுகின்றார்கள். விபூதி தரிப்பது மற்சமாமிசம் புசியாது விடுவது இந்த இரண்டு மாத்திரமே சைவசமயிகட்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகின்றார்கள். விபூதி தரிப்பது, மற்சமாமிசம் புசியாது விடுவது மற்சமாமிசம் புசிக்கிறவர் காணாமற் போசனஞ் செய்வது இந்த மூன்றுமே சைவ சமயிகட்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகிறார்கள்.

*சைவ சமயிகட்கு உரிய முக்கிய இலக்கணங்களாவன:*

1. கொலை, களவு, கள்ளுண்ணல், மற்ச மாமிசம் புசித்தல், வியபிசாரம், பொய் முதலாகிய பாவங்களை மரணபரியந்தம் விலக்கி நடப்பது.

(6 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5ம் பக்கத் தொடர்ச்சி)

2. உயிர்களுக்கு இரங்குதல், மெய் பேசுதல், வறியவர்களுக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்தல், செய்நன்றியறிதல் முதலிய இந்தத் தருமங்களை மரண பரியந்தம் பாதுகாத்து நடப்பது.

3. பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, இராசா முதலிய பெரியோர்களை மரண பரியந்தம் உபசரிப்பது.

4. சிவதீக்ஷை பெற்றுக் கொள்வது.

5. விபூதி, ருத்திராக்கம் தரிப்பது.

6. சந்தியாவந்தனம், சிவத்தியானம், பஞ்சாக்ஷர செபம், சிவஸ்தோத்திரம், இவைகளை மரண பரியந்தம் நித்தமும் ஒரு பத்து நிமிஷ நேரமாவது மனத்தை ஒடுக்கி விதிப்படி அன்புடன் செய்து முடிப்பது.

7. நித்தமுமாவது, புண்ணிய கரலங்களிலாவது சிவலிங்கப் பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ் செய்து வணங்கித் துதிப்பது.

8. சைவ வினாவிடை, சிதம்பர மான்மிய வசனம், பெரிய புராண வசனம் முதலாகிய புத்தகங்களை வாசித்தாவது கேட்டாவது அறிவது.

9. சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணிய பாவங்களையும் சிவபெருமானை வழிபடு முறைமையையும் அறிவிக்கிற சைவப் பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது.

10. சிவ நிந்தை, சிவசாத்திர நிந்தை, குரு நிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைக் கேளாது நீங்கி விடுவது.

11. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்க வாசக சுவாமிகள் என்னுஞ் சைவசமய குரவர் நால்வருடைய திருநக்ஷத்திரங்களிலே அவரவருடையசரித்திரத்தைக் கேட்டுச் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங் கொடுத்து விரதத்துடன் இருப்பது.

12. செய்யத்தகாத பாவத்தைச் செய்தாலும் செய்யத்தக்க புண்ணியத்தைச் செய்யாதுவிட்டாலும் மனம் பதைபதைத்து அஞ்சி நடுநடுங்கி குருவை அடுத்து அவர் சிவாகமப் பிரகாரம் விதித்த பிராயச்சித்தத்தை விசுவாசத்துடன் செய்து கொள்வது.

எனக் குறிப்பிட்டுள்ளமை சைவ சமயிகளின் சிந்தனைக்குரிய கருத்துக்களாகும்.

தமது காலத்தில் நிலவிய ''யாழ்ப்பாணச் சமய நிலை'' பற்றி நாவலர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். சைவக் கோவில்களிலே வழிபாட்டுமுறைகள் செவ்வனே நடைபெறவில்லை. சைவாகம விதிகளுக்கும் குமார தந்திரம் போன்ற பிரமாண நூல்களுக்கும் பிறம்பான திருவிழாக்கள், பூசை, விக்கிரக தாபனம் முதலியன நடைபெற்று வந்தன. சைவக்குருமார்களிற்பலர் அந்தியேட்டிப் பட்டோலை தானும் - இன்னும் சொல்லின் அந்தியேட்டி என்னும் பெயர் தானும் பிழையற எழுத அறியாதிருந்தனர். சைவாகமத்திற் சுலோகம் ஒன்றாயினும் தேவார திருவாசகங்களில் பாடல் ஒன்றாயினும் அறியாதிருந்தனர். பொதுமக்களுக்குக் காலத்திற்குக் காலம் சைவசமய உண்மைகளை எடுத்துரைக்கும் சைவப் பிரசாரகர் இக்காலத்தில் இல்லை. சைவ உண்மைகளை நிலைநாட்டி போலிப் பிற மதவாதிகளின் தூசனத்தினை எதிர்த்து வெளியிடச் சைவர்களுக்கு செய்தித் தாள் இருக்கவில்லை. சைவக் கோவில்களில் தேவாரம் முதலியன பண்ணுடன் ஓதப்படுதல், புராணபடனம் முதலிய சிவபுண்ணியச் செயல்களுக்குப் பதிலாக வேறு களியாட்டங்கள் இடம் பெற்ற நிலை காணப்பட்டது.

இத்தகைய ஒரு சூழ்நிலையை எதிர்கொள்ளும் முகமாகவே நாவலர் தமது காலத்திற் செயற்பட்டார். அவர் பால் அமைந்திருந்த நினைவுத்திறன், பல்கலைப்புலமை, சமய உணர்வு, நாநலம், பெருந்தன்மை ஆகியவை மக்களைச் சீரிய சமயநெறியின் பால் ஈடுபடுத்தும் பணிக்குரிய ஆளுமையை அவரிடம் ஏற்படுத்தின. ஊழி பெயரினும் தாம் பெயராத சான்றாண்மையைப் பெற்றுச் சமய உலகில் புகழ் நிறுவியவர் நாவலர்.

யாழ்ப்பாண மக்களிடையே நிலவிய சமயஞ்சார்ந்த குறைபாடுகளை எடுத்துக் கூறி அவர்கள் சிந்திக்கும் வண்ணம் யதார்த்தமான கருத்துக்களை எடுத்துக் கூறினார். (ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, 1996, பக். 68)

''யாழ்ப்பாணத்திலுள்ள சைவ சமயிகளே! உங்களிடத்துள்ள அன்பு மிகுதியினாலே நாஞ்சொல்பவைகளைக் கேளுங்கள். நீங்கள்சிவதீட்சை பெற்றும் என்னை? விபூதி ருத்திராக்ஷதாரணம், பஞ்சாக்ஷர செபம், சிவாலய தரிசனம் இவைகளை நியமமாகச் செய்தும் என்னை? அந்தியேட்டி சிராத்த முதலியவைகளைச் செய்தும் என்னை? சிதம்பராலய தருமத்தின் பொருட்டுஅளவு கடந்தஆஸ்திகளைக் கொடுத்தும் என்னை? வருஷத்துக்கு இரண்டுதரஞ் சிதம்பர யாத்திரை செய்தும் என்னை? சேது முதலிய புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்தும் என்னை? ஊர்தோறுங் கோயில் கட்டுவித்துப் பூசை, திருவிழாக்கள் செய்வித்தும் என்னை? சிவராத்திரி, கந்தசட்டி, கார்த்திகை, சுக்கிர வார முதலிய விரதங்களினாலும் அங்கப் பிரதக்ஷிணத்தினாலும் உடம்பை வருத்தியும் என்னை? நீங்கள் உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும் உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும், ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும் அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும் சிவபெருமானை வழிபடும் முறைமையையும் அதனாலேபெறப்படும் முத்தியின் இலக்கணங்களையும் கிரமமாகப் படித்தாயினும்கேட்டாயினும் அறிகின்றீர்களில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்களில்லை. உங்கள் கோயில்களிலே சிவபக்தியை வளர்த்தற்கு ஏதுவாகிய வேதபாராயணம், தேவார, திருவாசக பாராயணம், சைவசமயப் பிரசங்கம் முதலிய நற்கருமங்களைச் செய்விக்கின்றீர்களில்லை. கேட்கத்தகாத சிற்றின்பப் பாட்டுக்களைப் படிப்பிக்கின்றீர்கள். இது பற்றி விளையும் பெருங்கேடுகளையும் இது பற்றி அன்னிய தேசத்தாராலும் அன்னிய சமயத்தாராலும் உங்களுக்குக் கிடைக்கும் எல்லைகடந்த அவமதிப்பையும் இன்றும் நீங்கள் எட்டுணையேனுஞ் சிந்திக்கின்றீர்களில்லை. ... நீங்கள் செய்பவைகளென மேற் சொல்லப்பட்ட சிவபுண்ணியங்களினால் யாதொரு பயனும் உண்டாகாதே!'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற் சில இக்காலத்திற்கும் பொருந்துவனவாகும். சைவசமய வளர்ச்சிக்கு ஏதுவானவற்றைச் செய்யாமல் சைவ நிந்தனைக்குரியவற்றை செய்வதைத் தவிர்க்க வேண்டுமென்பதே நாவலரது உட்கிடக்கையாகும்.

எவ்வளவோ காலத்துக்குப் பின்பு நிகழவிருக்கும் காரியங்களை எவ்வளவோ காலத்துக்கு முன்பே தம் உள்ளொளியால் அறிந்து உரைக்கக்கூடியவர் எவரோ அவரே தீர்க்கதரிசி. சைவசமயம் எமது நாட்டில் எத்துணை இடர் வந்தாலும் அழியாது வாழவேண்டும் என்பதை

(7ம் பக்கப் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தமது தீர்க்க தரிசனத்தால் உணர்ந்து அதற்காக வழி யமைத்து நெறிப்படுத்தியவர் நாவலர். சமய வளர்ச்சிக் கென அவர் நிகழ்த்திய சமயப் பிரசங்கங்களினால் பெரும் பயன் விளைந்தது. இதனைப் பற்றி வே. கனகரத்தின உபாத்தியாயர் ஆறுமுகநாவலர் சரித்திரத்தில் (1968 பக். 20) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'சைவ சமயம் இப்படிப்பட்டதென்றும், சைவசமயி கள் வழிபடுங் கடவுள் இத்தன்மையுடையவரென்றும், சைவசமயிகள் அத்தியாவசியந் தரிசிக்க வேண்டிய சின் னங்கள் இவையென்றும், சைவசமயிகளுக்கு வேண்டும் இலக்ஷணங்கள் இவையென்றும் பிரசங்கித்தலே தகுதி யெனக்கண்டு, அவ்விஷயங்களை அதிப் பிரபல பிரமா ணங்களோடும் எடுத்துப் பிரசங்கித்தார். அக்காலத்திற் செய்த பிரசங்கங்களாவன: கடவுள் வாழ்த்து, உருத் திராக்ஷதாரணம், சிவபக்தி, வேதாகமங்கள் திருவிழா, சிவலிங்கோபாசனை, யாக்கை நிலையாமை, சிவதீக்ஷ, மகளிரொழுக்கம், இகபரசிலாக்கியங்கள், தருமம், செய் நன்றியறிதல், பிக்ஷையிடுதல், கல்விகற்பித்தல், கடவு ளொருவருண்டெனல், பசுக்காத்தல், அறிவொழுக்கங்க ளிற்சிறந்தோரைத் தழுவி நடத்தல், பிரபஞ்சமாயை, பேதைமை, கொல்லாமை, நீதசிக்ஷை வியபிசாரம், கள்ளுண்ணல், சிவத்திரவியங்களைக் கவர்தல், முதலி யவைகளே''.

இத்தகைய முக்கிய விடயங்களை பிரபலமான நியா யங் கொண்டு சைவசமயிகளுக்குப் புலப்படும் படி பிரசங் கம் செய்ததனால் பல பயன்கள் சமய வாழ்வில் ஏற்பட்டன.

1. மாமிச போசனஞ் செய்த அநேகர் அது செய்யாது விட்டனர்.
2. தீக்ஷை பெற்றுக் கிரமமாகச் சந்தியா வந்தனஞ் செய்தனர்.
3. ஆலய தரிசனஞ் செய்தவர்கள் உருத்திராக்ஷமாலை யணிந்து கோயில் தரிசனங்களுக்குச் சென்றனர்.
4. தரிசன காலங்களில் கோயில்களில் தோத்திரம் பண்ணத் தொடங்கினர்.
5. ஆலய தரிசனஞ் செய்யாத அநேகர் விசேட புண் ணிய காலங்களிலும் நியமமாகவும் தரிசனஞ் செய் யத் தொடங்கினர்.
6. சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு வேதசிவாக மமென்னும் முதல்நூல்களை அருளிச் செய்தாரென் றும் அவைகளின் வழி நூல் சார்பு நூல்களும் அவ் வக் காலங்களிலே தோன்றினவென்றும் மற்றைச் சித்தாந்த நூல்களும் அவர் அருள் பெற்றவர்களா லேயே செய்யப்பட்டனவென்றும் விசுவசித்துக் கொண்டனர்.
7. சிவன் ஒருவரே சகல ஆன்மாக்களுக்கும் மேலாகிய கடவுள் என்றும் அவரை வழிபடுதலால் தாங்கள் சித்தாந்த சைவர் என்றுந்தெளிந்து கொண்டார்கள்.
8. கோயில்களிலே சுவாமியைத் தாங்குதல் தங்களுக்கு அவமானம் என்று எண்ணியிருந்த அநேகர், சுவா மியைத் தாங்குதலால் வரும் பயன் இது வென்றும் அதனால் தாங்கள் ஸ்ரீபாதத் தாங்கிகள் என்றும் திவ்விய நாமத்தைப் பெற்றுக் கொள்வோமென்றும் அறிந்து தாங்கத் தொடங்கினார்கள்.
9. தருமம் செய்தலின் மிக்க புண்ணியம் பிறிதொன் றுமில்லை யென்று கண்டு தருமஞ் செய்யத்தொடங் கினார்கள்.
10. சிவன் மீது அன்பு வைத்தார்கள்.
11. பெண்கள் தம் கடமைகளையும் ஒழுக்கங்களையும் அறிந்து கொண்டனர்.
12. திருவிழாக்கள் தங்கள் தங்கள் கொண்டாட்டத் துக்கு மிக உவப்பானவைகளென்று நினைத்த அநேகர் கடவுள் உற்சவங் கொண்டருளுவது ஆன் மாக்களாகிய நாமெல்லாந் தம்மேலே பத்தி செய் யும் பொருட்டென்று உணர்ந்து திருவிழாக்காலங் களிலே துன்மார்க்க விடயங்களிலே மனதை விடாது கடவுள் மீது பத்தி செய்து அவரை வழிபடத் தொடங்கினார்கள்.
13. பசுக்கள் தரும் பஞ்சகவ்வியங்கள் சிவபெரு மானுக்கு அபிஷேகத் திரவியங்களாகின்றனவென் றும் அவற்றின் சாணம் சிவசின்னமாகிய விபூதிக்கு மூலம் என்றும் அறிந்து அவைகளை வணங்குதற்கும் அன்போடு புல் முதலியன கொடுத்தற்கும் அவை களின் பொருட்டு கேணி, குளங்களை வெட்டு வித்து அவைகளினருகே ஆவுரிஞ்சுகல் நாட்டு வித்தற்கும் தொடங்கினார்கள்.
14. கூடாத சகவாசஞ் செய்யாது சற்சனரோடு சகவா சஞ் செய்தலே பெருமை யென்று உணர்ந்து அவர் களோடு பொழுது போக்கினர்.
15. கல்வியிற் குறைவுடையோரும் கல்வியில்லாதவரு மாகிய இருதிறத்தாரும் கல்வியின் மேம்பட்ட செல் வம் பிறிதொன்று மில்லையெனக் கண்டு கல்வி கற்கத் தொடங்கினார்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் சைவம் நாவலர் முயற்சி யினால் வளம்பெற்றது.

'சைவப்பிரகாச வித்தியாசாலைகளுக்கு மூன்றாம் பாலபாடம் அவசியம் வேண்டியிருந்தமையால் வேத சிவாகமங்களிலும் இதிகாச புராணங்களிலும் நீதி நூல் களிலும் உள்ளவைகளைத் திரட்டி வசனரூபமாக எழுதி, இறுதியிலே ஔவையாரருளிச் செய்த வாக் குண்டாம் நல்வழியையும் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த நன்னெறியையும் உரையுடன் சேர்த்து அச்சிட்டார்.' என வே. கனகரத்தின உபாத்தியாயர் தமது நூலில் குறிப்பிட்டதிலிருந்து நாவலர் சமய வளர்ச்சிக்கு ஏதுவான நூல்களில் அதிக கவனம் செலுத்தி, அவை கூறும் சமயக் கருத்துக்களை மக்கள் அறிந்து பயன் பெறும் பொருட்டு வெளியிட்டமை குறிப் பிடத்தக்கது.

(தொடரும்)

## மாணிக்கவாசகர் குருபூசை

பிரமாதி வருடம் ஆனித்திங்கள் 32 உ (16-07-99) வெள்ளிக்கிழமை சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

திருவாசகம் ஓதல், சொற்பொழிவுகள் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


**இந்துசாதனம்**

பிரமாதி ஸ்ரீ ஆனி மீ 14 உ (28-06-1999)


# சைவாலய அர்ச்சகர்கள் சிவாச்சாரியார்கள் [1]

இன்று ஈழத்துச் சைவ சமூகம் — சைவாலயங்கள் எதிர்நோக்கியிருக்கிருக்கும் மிகப்பெரிய பிரச்சனை எது எனக் கேட்பின் அது சைவாலயச் குருமார் பற்றியது எனத் துணிந்து கூறலாம். ஆகவே இவ்விழிலும் அடுத்துவரும் இதழ்களிலும் இவை பற்றிச் சிந்திப்போம்.

சைவவாழ்க்கையின் நோக்கம் சைவசித்தாந்த அனுபவத்தைப் பெறுவது. அதைப் பெறுதற்கேற்ற தகுதிப்பாட்டை வருவிப்பது சிவபுண்ணியம். சிவ புண்ணியச் செயல்களில் தலையாயது சிவபூசை. நாம் மேற்கொள்ளும் சிவ புண்ணியச் செயல்களுள் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததும் அதிக பிரயாசையோடும் அதிக சிரத்தையோடும் செய்யப்பட வேண்டியதும் பூசை.

ஆலயங்களிலாயினும் சரி வேறு எங்காயினும் சரி சிவம் தானாகத் தோன்றிக் காட்சியளிப்பது ஞானிகளுக்கு மட்டும் தான்.

ஏனையோருக்கு பரார்த்த நிலையில் மந்திரம், பாவனை, கிரியை என்பவற்றின் மூலமாகத் தகுதியான அர்ச்சகர் ஒருவரால் சிவத்துவ விளக்கம் ஏற்படுத்திய பின்னரே தரிசனம் கிடைக்கும். தரிசித்த பலனும் கிடைக்கும். இந்த ஒரேயொரு காரணத்திற்காகவே ஆலயங்கள் தோன்றின. அங்கு விக்கிரகங்கள் பிரதிட்டையாயின. பூசைக் கிரமங்கள் வகுக்கப்பட்டன.

பூசைக் கிரமங்கள் முறையாக வகுக்கப்பட்ட நூல்கள் பத்ததிகள் எனப்படும். அவை சிவாகமங்களில் கூறப்பட்ட சரியை, கிரியை முறைகளை ஒழுங்குபடுத்திக் கூறுகின்றன. அவை மட்டும் தான் சிவாலய பூசைக்கு ஆதார நூல்.

சைவசித்தாந்த அறிவு விளக்கத்தில் பார்க்கும் போது வேதாகமங்கள், சித்தாந்த சாத்திரங்கள், பன்னிரு திருமுறைகள் எல்லாவற்றின் சாரமும் ஆலய பூசைகள், கிரியைகள், விழாக்களில் அடங்கியிருப்பதைக் காணலாம்.

சைவாலய பூசைகளும் கிரியைகளும் பாவனை, கிரியை, மந்திரம் என்னும் மூன்று உறுப்புக்களைக் கொண்டுள்ளன.

சிவபூசையாயினும் சரி வேறெந்தச் சைவக் கிரியை ஆயினும்சரி ஆரம்பிக்குமுன் சிவாச்சாரியர் தன்னைச் சிவனென்று பாவனை செய்து கொள்வதுவே பாவனை எனப்படுகிறது.

உயிர், தான் ஆன்மா என்ற உணர்வு நிலையில் இருக்கும் வரையும் தன்னை அகங்கார மமகாரங்கள் அற்றவனாகப் பாவிக்க முடிவதில்லை. அகங்கார மமகாரங்களுடன் பூசிப்பது எதிர் விளைவுகளையே தரும். ஆகவே பூஜிப்பவர் தன் உடல், கருவி, கரணங்கள் எல்லாவற்றையும் பற்றி நிற்கும் மாயவியல்புகள் அனைத்தினையும் இயலுமளவு நீக்கித் தன்னைச் சுத்திகரிக்கும் கிரியைகளைச் செய்தபின் மந்திர சகிதமான பாவனையால் தன் தூல தேகத்தை முற்றாக அழித்துத் தன் சிரசிலிருந்து பெருகும் அமிர்தப் பிரவாகத்தினால் தனதுடலை மீளப்படைக்கப்பெற்ற ஒரு தெய்வீகத் திருமேனியாக ஆக்கிக் கொள்கிறார். இவ்வாறு பூஜிப்பவர் தம் உயிரையும் சிவமாகப் பாவனை செய்கிறார்

கிரியை என்பது முத்திரைகளுடன் செய்யப்படும் செய்கை.

மந்திரம் என்பது எண்ணத்துக்கேற்பக் கிரியைகளின் பயனைத் தரவல்ல சொற்றொடர்.

ஒவ்வொரு கிரியையும் அதற்கேற்ற பாவனை மந்திரங்களுடன் செய்ய வேண்டும். பாவனையில்லாது மந்திரங்களுடன் கூடிய கிரியைகளைச் செய்தால் அவை பயன் தரா. அதனால் பாவமே விளையும். ஆகவே பாவனை, கிரியை, மந்திரங்கள் மூன்றையும் பிழையறச் செய்தல் வேண்டும்.

சிவபூசை ஆன்மார்த்த பூசை, பரார்த்தபூசை என இரு வகையாகச் சொல்லப் படுகிறது. இரண்டிற்கும் அதிக வித்தியாசமில்லை. இரண்டும் தன்மையளவில் ஒன்றே. பிரதான கிரியாம்சங்கள் சகலமும் இரண்டுக்கும் ஒருவகையே.

பூசிப்பவர் பிறர் சார்பில்லாமல் தம்மளவில் தாம் புரியும் பூஜை ஆத்மார்த்த பூசை.

பூசிப்பவர் தமக்கும் ஆத்மார்த்தமாய் அதேவேளை சம்பந்தப்பட்ட பிறர்க்கும் ஆத்மார்த்தமாய்ப் பலன் பெற இயற்றும் பூசை பரார்த்த பூசை.

சைவாலயங்களில் நடைபெறும் பூசைகள் பரார்த்த பூசை.

சைவாலயங்களில் நித்திய பூசைகளும் நைமித்திகமாகிய திருவிழாக்களும் சைவாகம விதிப்படி நடத்தல் வேண்டும். அல்லாவிடில் பெருங்கேடு விளையும்.

''ஆற்றரு நோய் மிகும்
அவனி மழை குன்றும்
போற்றரு மன்னரும்
போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக்
கோயில்கள் ஆனவை
சாற்றிய பூசைகள்
தப்பிடில் தானே''

எனவும்

''முன்னவனார் கோவில்
பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள
வாரி வளங்குன்றுங்
கன்னல் களவு மிகுத்தி
டும் காசினிக்கு
என்னரு நந்தி எடுத்
துரைத்தானே''

எனவும் திருமூலர் திருமந்திரத்தில் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஆகவே பூசைகளையும் கிரியைகளையும் பிழையற மனவொருமைப்பாட்டோடு செய்யக் கூடிய குருமார்களே சைவாலயங்களின் அச்சாணியாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



''நந்தார் படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான் திருக் கேதீச்சரத் தானே''

— சுந்தரர்

# கேதீசநாத ஸுப்ரபாதம்

கடந்த இதழிலே திருக்கேதீச்சர ஆலயத்தின் இன்றைய நிலைபற்றிக் குறிப்பிட்டு அவ்வாலயத்தில் மீண்டும் நித்திய நைமித்திகங்கள் நடைபெறக்கூடியதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தோம். திருக்கேதீச்சரம் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டுமெனவும் திருக்கேதீச்சர நினைவை எம் மனங்களில் பசுமையாக வைத்திருக்கும் முயற்சிக்கு இந்துசாதனத்தின் பங்களிப்பாக இந்துசாதன இதழ்களில் திருக்கேதீச்சரம் பற்றிய தொடர் கட்டுரைகள் வெளிவருமெனவும் குறிப்பிட்டிருந்தோம்.

இக்கட்டுரைத் தொடரை எவ்வாறு ஆரம்பிக்கலாமெனச் சிந்தித்த போது கேதீசநாதர் திருவருளால் எமது மனத்திரையில் வந்தது, முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம ஸாஸ்திரிகள் பாடிய கேதீசநாத ஸுப்ரபாதம் என்னும் முப்பத்து மூன்று வடமொழிப் பாடல்கள் (சுலோகங்கள்). ஸு என்பது நன்மை. ப்ரபாதம் என்பது விடியற்காலம். ஸுப்ரபாதம் என்பதற்கு நல்ல — அதாவது — மங்கலமான விடியற்காலம் என்பது பொருள். விடியற்காலத்தில் பாடப்படும் மங்கலப் பாடலை ஸுப்ரபாதம் என்ற பெயரால் வழங்குவது மரபு.

விடிவைத் தேடிநிற்கும் நாம் கேதீச ஸுப்ரபாதத்தை மனதுருகிப் பாடித் திருக்கேதீச்சர நாதன் திருவடிகளை நினைந்து உருகுவது தானே நாம் செய்யக்கூடிய முதற்கடன். ஆகவே திருக்கேதீஸ்வரம் பற்றிய தொடர் கேதீச நாத ஸுப்ரபாதத்துடன் ஆரம்பமாகிறது

கேதீசநாத ஸுப்ரபாதத்தைப் பாடியருளிய வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் வடமொழியை ஐயந்திரிபறக் கற்றறிந்த ஆழ்ந்த புலமைமிக்க மகா உத்தமர். சிறந்த ஆசார அனுட்டான சீலர். பக்திமான். சாஸ்திரிகள் தேவாரப் பாடல் பெற்ற பல க்ஷேத்திரங்களை நினைந்துருகிச் சுலோகங்கள் பாடியுள்ளார்.

கேதீசநாத ஸுப்ரபாதம் 1967 ஆம் ஆண்டு பாடப்பட்டு பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாணவ சங்கத்தினரால் வெளியிடப்பட்டது. சுலோகங்களின் தமிழ் மொழிபெயர்ப்பும் சாஸ்திரிகளுடையதே.

இவ்விதழில் முதல் மூன்று சுலோகங்கள் இடம்பெறுகின்றன. ஏனையவை தொடர்ந்து வெளிவரும்.

— ஆசிரியர்

*முதலாவது சுலோகம்:*

ஸ்ரீ சங்கபாணி கமலேச விருஷாதிருட
மத்தேபசர்ம பரிகர்மித திவ்யகாத்ர /
பிரேமாச்ருபாத புலகாஞ்சித பக்தவந்த்ய
கேதீச நாத சுகதம் தவஸுப்ரபாதம் //

தமிழ் மொழிபெயர்ப்பு:

பாஞ்ச ஜந்நியம் என்ற சங்கைக் கையிலேந்திய திருமால் பசுபதிக்கு பணிபுரியக் கருத்துக்கொண்டு இடபரூபம் தாங்கிவர அதனில் ஆரோகணித்து அருள் செய்த பெம்மானே! மதங்கொண்டு யானைவடிவம் தாங்கிய அசுரனைச் சங்கரித்து அதன் தோலை அணிந்த அழகிய திருமேனி பொருந்தியவரே! காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி மெய்சிலிர்த்து அடியார்களால் வணங்கப்படுபவரே! கேதீசநாதப் பெருமானே! உன்காட்சி கண்ட இந்நாள் இன்பந்தரும் நன்னாளாகும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம்

**— இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —**

நினைப்பு, மறப்பு, விழிப்பு, நித்திரை, பிறப்பு இறப்பு முதலிய காரியங்கள் நமது வல்லமையைக் கடந்து நடக்கின்றன.

அக்காரியங்களை நடத்தி வைக்கும் பொருள் எது? அப்பொருள் நமது வல்லமையைக் கடந்த பொருள்; கடவுள்.

கடவுளுக்கு வடிவம் உண்டா? உண்டு. அது இந்தக் கண்ணாற் காணமுடியாதது; சுத்த அறிவினாற் காணத்தக்கது. அதற்கு நீதி என்று பெயர்.

நீதி வெகு ஆழமானது; மிகமிக நீளமானது. 'பங்கயத் தயனு மாலறியா நீதி' என்பது மணிவாசகம். நீதியின் ஆழத்தையும் நீளத்தையும் காணுதற்குப் பிரம விஷ்ணுக்களுக்குக் கூடச் சுத்த அறிவு போதிய அளவுக்கு உண்டாகவில்லை.

நீதியை மறைக்குங் குற்றங்கள் இரண்டு. ஒன்று அறியாமை; மற்றது வஞ்சகம்.

அறியாமை பாவமன்று; முயற்சிக்குப் பயன் தாராது. அதனாற் குற்றம் எனப்படுகிறது.

வஞ்சகம் படுகுற்றம்; மகா குற்றம்; நரகத்துக்கு வித்து. அது அறிவு முனையை அழித்து, அந்தகாரம் செய்துகொண்டிருப்பது.

வழியில் ஒரு பொருளைக் கண்டு எடுக்கின்றோம். பொருளுக்குரியவர் இன்னாரென்றுந் தெரிகிறது. விசாரித்து நிச்சயஞ் செய்யப் போதிய வழிதுறைகளும் இருக்கின்றன. பொருளை அதற்கு உரியவரிடம் ஒப்பிப்பதே நீதி என்று அறிவு சொல்லுகின்றது. வஞ்சகம் அந்த அருமந்த அறிவை மழுக்கி, மாயஞ் செய்துவிடுகின்றது.

இந்தக் கள்ள வஞ்சகந்தான் நமது பரம சத்துரு. அதனோடு சதா போர்தொடுத்துக் கொண்டே நாம் சாவதானமாயிருக்கவேண்டும். வஞ்சகம் மனத்தை ஒரு கணத்திலே தன்வசப்படுத்திவிடும். நாம் அதனைச் சிறை மீட்டு அறிவுவசப்படுத்தவேண்டும். 'நீதி எது! எது!! எது!!!' என்ற விசாரந்தான் வஞ்சகத்தைக் கொல்லும் படை. அப்படையினாலே இச்சையை நேர்செய்து கொண்டால், அறியாமை மெல்ல மெல்ல நீங்கும். அறியாமை நீங்கச் சுத்த அறிவு உதயமாகும். அந்தச் சூரியோதயத்திலே நீதியின் பிழம்பு ஒரு சாயலாகத் தோன்றத் தொடங்கும். அறிவுச் சூரியன் மேல் எழ எழ நீதியின் உண்மைத் தோற்றம் — கை கால் முதலிய அவயங்கள் — காட்சியளிக்கும். அடி முடி தோன்றும்.

நீதியை விசாரிப்பதிலே — விசாரித்து, அந்த நீதியிலே எவ்வித வஞ்சகத் தடையுமின்றி நிலைநிற்பதிலே எவனுக்குச் சதா பரிசுத்த விருப்பம் உண்டோ, அவன் சமயி.

அந்த விருப்பத்தை நூறாயிரம் கள்ளக் காரணங்கள் கற்பித்து எவன் வஞ்சிக்கின்றானோ, அவன் சமயி அல்லாதவன்.

முந்தியவன் அகச்சமயி; மற்றவன் புறச்சமயி.

அகச்சமயி சமயத்துக்குள்ளானவன்; புறச்சமயி சமயத்திற்குப் புறம்பானவன்.

நீதியை வஞ்சகமின்றி விசாரித்து விரும்புவது அகம். அதற்குச் சமயம் என்று பெயர்.

நீதிதான் கடவுளின் வடிவம். அதற்கு மற்றொரு பெயர் சிவம். சிவம் என்றால் நன்மை, மங்களம், நீதி என்று பொருள்.

எவன் நீதியோடு சம்பந்தப்படுகின்றானோ, அவன் சிவத்தோடு சம்பந்தப்படுகின்றான்.

சிவத்தோடு சம்பந்தப்படுகிறவனுக்குச் சைவன் என்று பெயர்.

சிவத்தோடு சம்பந்தப்படுத்தப்பட்ட சமயம் சைவ சமயம்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

---

(9 ம் பக்கத் தொடர்ச்சி)

*இரண்டாவது சுலோகம்:*

**காலாக்னிதக்த பஸிதாமல பவ்யகாத்ர**
**கடாலாப்புதாப கமநீய ஸுநீலகண்ட /**
**காஞ்சீகுணோஜ்வல ஸுமத்யமயாஸமேத**
**கேதீச நாத சுகதம் தவஸுப்ரபாதம் //**

தமிழ் மொழிபெயர்ப்பு:

ஊழிக்கால நெருப்பினால் எரிக்கப்பட்டு வெண்ணீற்றை அணிந்து தூய திருமேனியுடன் விளங்குபவரே! நீருண்ட மேகம் போல விளங்கும் அழகிய கரிய கழுத்தை உடையவரே! ஒட்டியாண ஒளியுடன் விளங்கும் அழகிய இடை பொருந்திய கௌரி அம்மையாருடன் கூடிய பெருமானே! கேதீசப் பெருமானே! உன் காட்சி கண்ட இந்த நாள் இன்பந் தரும் நன்னாளாகும்.

*மூன்றாவது சுலோகம்:*

**ஆம்நாயசூக்த மகிதாமர பூஸுரைச்ச**
**ஸ்ரீரோததீரரசிதே நகரே சரம்யே /**
**த்வஷ்ட்ரா நிபத்த நிலயே நியதாதிவாஸ**
**கேதீச நாத சுகதம் தவஸுப்ரபாதம் //**

தமிழ் மொழிபெயர்ப்பு:

அமரரும் அந்தணரும் ஸூக்தங்கள் கூறி வழிபடும் பெருமை வாய்ந்தவரே! பாலாவியின் கரையில் அழகாக அமைக்கப்பட்ட நன்னகரத்தில் தேலதச்சன் அமைத்த ஆலயத்தில் என்றும் உறைபவரே! கேதீசப் பெருமானே. உன்காட்சி கண்ட இந்த நாள் இன்பந்தரும் நன்னாளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்ளுங்கள்

**பஞ்சாட்சரம் -**

நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரம்

**பஞ்சகிருத்தியம் -**

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் இறைவனின் ஐந்தொழில்கள்

**பஞ்சபூதங்கள் -**

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், என்னும் பிரபஞ்சத்தின் ஐந்து கூறுகள் (ஐம்பூதங்கள்)

**பஞ்சாங்கம் -**

கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம் எனும் ஐந்து உறுப்புக்களைக் கூறும் காலக் குறிப்பு

**பஞ்ச கவ்வியம் -**

பசுவின் பால், தயிர், நெய், சிறுநீர், சாணம் ஆகியவை

**பஞ்ச கருவி -**

தோல், துளை, நரம்பு, கஞ்சம் (வெண்கலம்), மிடறு (குரல்வளை) என்னும் ஐந்து வகை வாத்தியங்கள் (இசைக் கருவிகள்)

**பஞ்ச பூதத் தலங்கள் -**

காஞ்சி- மண் (பிருதிவி) இலிங்கம்
திருவானைக்கா – அப்பு (நீர்) இலிங்கம்
திருவண்ணாமலை – தேயு (தீ) இலிங்கம்
திருக்காளத்தி - வாயு (காற்று) இலிங்கம்
சிதம்பரம் - ஆகாய இலிங்கம்

**பஞ்சமா பாதகங்கள் -**

கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குரு நிந்தை

**பஞ்ச சபைகள் -**

இரத்தினசபை - திருவாலங்காடு
கனகசபை - சிதம்பரம்
வெள்ளிச்சபை - மதுரை
தாமிரசபை - திருநெல்வேலி
சித்திரசபை - திருக்குற்றாலம்

**பஞ்ச சுத்தி -**

ஆன்ம சுத்தி, தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி என்னும் ஐந்து வகைத் தூய்மைகள்

**பஞ்ச தருக்கள் -**

சந்தனம், தேவதாரம், கற்பகம், மந்தாரம் பாரிசாதம் எனும் ஐந்து வகைத் தருக்கள் (மரங்கள்)

**பஞ்ச லோகங்கள் -**

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்னும் ஐந்து உலோகங்கள் (ஐம்பொன்)

**ஐம்பொறிகள் –**

மெய், வாய், கண், மூக்கு, வாய்

**ஐம்புலன்கள் -**

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

**சப்த நதிகள் -**

கங்கை, யமுனை, சரசுவதி, நர்மதா, காவேரி, சிந்து, கோதாவரி எனும் சப்த (ஏழு) நதிகள்

**சப்த ரிஷிகள் -**

அத்திரியர், ஆங்கீரசர், கௌதமர், ஜமதக்கினி பரத்துவாசர், வசிட்டர், விசுவாமித்திரர்,

அல்லது

அகஸ்தியர், புலஸ்தியர், அங்கிரக, கௌதமர், வசிட்டர், காசிபர், மார்க்கண்டர், எனும் ஏழு முனிவர்கள்

**சப்த மாதர்கள் -**

அபிராமி, மகேச்சுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி

**சப்த தலங்கள் -**

அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை.

**ஏழு பிறப்பு -**

தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம்

**நவசக்தி -**

வாமை, யேஷ்டை, ரௌத்திரி, காளி, பலவி கரனி, பலபிரமதனி, சர்வபூதமனி, சக்தி, மனோன்மணி ஆகிய சிவசக்திகள்

**நவதானியம் -**

உழுந்து, நெல், எள்ளு, கடலை, கொள்ளு கோதுமை, அவரை, பயறு, துவரை என்னும் ஒன்பது தானியங்கள்

**நவத்துவாரம் -**

கண்கள், காதுகள், மூக்குத்துளைகள், வாய், மலத்துளை, நீர்த்துளை என்னும் மனித உடம்பிலுள்ள ஒன்பது வாயில்கள்

**நவக்கிரகங்கள் -**

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன் வெள்ளி, சனி, இராகு, கேது என்னும் ஒன்பது கோள்கள்

(12 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகமங்களும் அவை கூறும் வழிபாடுகளும்

— சைவப்புலவர் வ. கந்தசாமி —

## சிவாகமத்தின் தோற்றம்

''தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம் வகுத்த வன்'' என்பது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரது திருவாக்கு. எனவே வேதகங்ளையும் காமிகம் முதலிய ஆகமங்களையும் பரமேசுவரனே அருளிச் செய்தார். வேதம் பசுவும் சிவாகமம் அதன் பாலும், வேதம் கனியும் சிவாகமம் அதன் சாறும், வேதம் உடலும் சிவாகமம் அதன் உயிரும், வேதம் ஒரு நதிக்குச் செல்லும் வழியும் சிவாகமம் அந்நதியிற் சென்று படியுந்துறையுமாய் இருக் கின்றன. வேத வழியில் நின்று ஆகம ஞானத்தைக் கைக் கொண்டவர்களுக்கே பரமேசுவரன் விரைவில் பேரருள் புரிவார். சிவாகமத்தின் ஞானபாதத்தில் சித்தாந்தமுடிவு அதிகமுமாய் விளங்குவதால் சிவாகம ஞானமே சிவபரம் பொருளை அடைவதற்கு இன்றியமையாது வேண்டப்ப டும்.

இன்னும் மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமா னது திருவருட் சிறப்பைக் கூறுமிடத்து,

''மன்னுமாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித்தும்''

என்றும் (அதாவது நிலை பெற்ற பெரிய மலையாகிய மகேந்திரத்திலிருந்து முன்னொருகால் உமா பிராட்டி யாருக்குச் சொல்லிய ஆகம நூல்களை வெளிப்படுத் தருளியும்)

''கேவேடர் ஆகிக் கெளிறது படுத்தும்
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்
துற்ற ஐம்முகங்களாற் பணித்தருளியும்'' என்றும்

(அதாவது வலைஞராகி கெளிற்று மீனை வீழ்த்தியும், பெரிய விருப்பத்தினைத் தருவதாகிய ஆகம நூலை அதன் பால் நின்று மீட்டுவாங்கியும், அங்ஙனம் வாங்கிய ஆகம நூல்களை மகேந்திரமலையிலிருந்து பொருந்திய தன் முகங்களால் ஆதி சைவ மரபில் வந்த அகத்தியர், காசிபர், கௌதமர், பரதுத்வாசர், கௌசிகர் ஆகிய ஐவருக்கும் உபதேசித்தருளியும்) அருளியுள்ளார்.

மேலும் திருமூலநாயனார் அருளிய பத்தாந்திரு முறையாகிய திருமந்திரத்தில் பாடல் 57 முதல் 66 வரை யுள்ள பாடல்கள் சிவாகமங்களின் சிறப்பை உணர்த்து கின்றன.

ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத் தெட்டாகும். இவ்வாகமங்கள் அகத்தியர் முதல் கௌசி கர் ஈறாகிய முனிவர்க்கு அருளிச் செய்து உபதேசிக்கப் பட்டன. பின்பு பிரணவர் முதல் மகாளர் இறுதியாக வுள்ள 66 பேர் சிவபெருமானை வணங்கி ஆகமங்களை உபதேசிக்கப் பெற்று மயக்கம் ஒழிந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாகமங்கள் சதாசிவமூர்த்தியால் அநந்ததேவருக் கும் அநந்ததேவரால் ஸ்ரீகண்டருக்கும், ஸ்ரீகண்டரால் தேவர்கட்கும், தேவர்களால் முனிவர்களுக்கும், முனிவர் களால் மானுடருக்கும் மானுடரால் மானுடருக்கும் குரு பரம்பரையாய் உபதேசிக்கப்பட்டு பரவலாயிற்று.

இத்தகைய ஆகமங்கள் எல்லாம் வேதங்கள் போல் தொகுத்துக் கூறப்படாமல் விரிவாகக் கூறப்பட்டிருக்கின் றன. ஆதலால் விரிவான ஆதார நூல் ஆகமமாயிற்று.

ஆகமத்தின் சிறப்பினை அறிந்த தேவர்கள் மயக்க மற்றுச் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக உணர்ந்து அவனது பெருமைகளைப் போற்றி நின்றனர்.

(தொடரும்)

---

(11 ம் பக்கத் தொடர்ச்சி)

**நவதீர்த்தங்கள் -**

கங்கை, யமுனை, சரசுவதி, நர்மதா சிந்து, காவேரி, கோதாவரி, சோணை (யாறு) துங்க பத்திரா எனும் ஒன்பது புண்ணிய தீர்த்தங்கள்

**நவநிதிகள் -**

பதுமம், பரபதுமம், சங்கம், மகரம், கச்சபம் முகுந்தம், நந்தம், நீலம், கர்வம் எனும் ஒன் பது வகைக் குபேரநிதியங்கள்

**நவமணிகள் -**

கோமேதகம், நீலம், பவளம், மாணிக்கம், முத்து, புஷ்பராகம், வைடூரியம், வைரம், மரகதம் ஆகிய ஒன்பது வகை மணிகள்.

**நவலோகங்கள் -**

பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பித்தளை, தரா (சங்கு), துத்தநாகம், வெண் கலம்.

**நவவீரர்கள் -**

வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீர மகேச்சுரன், வீரபுரந்தரன், வீரமார்த்தாண் டன், வீரராட்சதன், வீரராந்தகன், வீரதீரன், எனும் முருகக்கடவுளின் தூதர்கள் ஒன்பதுபேர்.

**நவரசங்கள் -**

நகை (சிரிப்பு), அழுகை, இகழ்வு, மருட்கை, அச்சம் (பயம்), பெருமிதம், வெகுளி (கோபம்), உவகை (சந்தோஷம்), அமைதி, ஆகிய ஒன் பது வகை நூற்சுவைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் பகுதி

# ஆடிப்பிறப்பு

**அன்பின் குழந்தைகளே!**

அன்பு வணக்கங்கள். சென்ற இதழில் ''பொறாமை கொடிது'' என்ற கதையை வாசித்து மகிழ்ந்து அது கூறும் நற்பண்பை மனதிற் பதித்திருப்பீர்கள் என நம்புகிறேன். ஆடு கதறியது என்ற தங்கத் தாத்தாவின் தங்கமான பாடலை அதற்குரிய மெட்டோடு பாடி மனமுருகி பிற உயிர்களுக்கு உறுகண் செய்வது பெரும் கொடுமை என்பதை உணர்ந்திருப்பீர்கள் எனவும் நம்புகிறேன்.

புத்தியுள்ளவனே பெரியவன். இவ்விதழில் இதை விளக்கும் ஒரு கதையைக் கூறுகிறார் செல்வன் குருபரன்.

இன்னும் சில தினங்களில் ஆடி மாதம் பிறக்கும். ஆடிப்பிறப்பன்று வீடுகளில் ஆடிக்கூழ் காச்சுவார்கள். வசதியிருந்தால் கொழுக்கட்டையும் செய்வார்கள். ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு முன் ஆடிப்பிறப்பு பாடசாலை விடுமுறை தினம். குழந்தைகளுக்குக் குதூகலம். ஆடிப்பிறப்பிற்கு முதல் தினம் குழந்தைகள் எல்லாரும் சேர்ந்து தங்கத்தாத்தாவின் பின்வரும் பாடலைப் பாடி மகிழ்வர்;

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டுநல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரை யுங்கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை யதிற்கொட்டிச்
சுற்றிக்கு ழைத்துத்தி ரட்டிக்கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப்பசி தீர்ந்திடுமே.

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டுமா வுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்கவா யூறிடுமே.

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்துவிளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே.

வன்னப் பலாவிலை ஒடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்நல்ல
மாவின் பழத்தை அறுத்துத்தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

183319

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

ஆடிப்பிறப்பு ஏன் விசேடமாகக் கொண்டாடப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளுவதற்கு காலப் பகுப்பை அறிந்திருப்பது நல்லது.

பூமி சூரியனை ஒரு தடவை சுற்றிவர எடுக்கும் காலம் ஒருவருடமெனப்படுகிறது. ஒரு வருடம் இரு அயனங்களாகப் பிரிக்கப்படும். பூமிக்குச் சார்பாகச் சூரியன் வடதிசை நோக்கி நகருங் காலம் உத்தராயனம் (உத்தரம் + அயனம்; உத்தரம் = வடக்கு) எனப்படும். பூமிக்குச் சார்பாகச் சூரியன் தென்திசை நோக்கி நகருங் காலம் தக்ஷிணாயனம் (தக்ஷிண + அயனம்=; தக்ஷிணம் — தெற்கு) எனப்படும். தைத் திங்கள் முதல் ஆனித் திங்கள் வரையான ஆறு மாதங்கள் உத்தராயனம். ஆடித் திங்கள் முதல் மார்கழித் திங்கள் வரையிலான ஆறு மாதங்கள் தக்ஷிணாயானம்.

பன்னிரண்டு மாதங்களும் ஆறு பருவங்களாகவும் பகுக்கப்படும். வடமொழியில் பருவம் என்பது ருது என்ற சொல்லால் வழங்கப்படும்.

சித்திரை, வைகாசி — இளவேனிற்பருவம் (வசந்த ருது)
ஆனி, ஆடி — முதுவேனிற்பருவம் (கிரீஷ்ம ருது)
ஆவணி, புரட்டாதி — கார்ப்பருவம் (வருஷ ருது)
ஐப்பசி, கார்த்திகை — கூதிர்ப்பருவம் (சர ருது)
மார்கழி, தை — முன்பனிப்பருவம் (ஏமந்த ருது)
மாசி, பங்குனி — பின்பனிப்பருவம் (சிசிர ருது)

உத்தராயனத்தின் ஆரம்ப நாள் தை முதலாம்நாள். தைப்பொங்கல் எனத் தமிழ் மக்களும் உத்தராயன புண்ணியகாலம் என ஏனைய இந்துக்களும் கொண்டாடுவர். புதிதாக அறுவடை செய்த நெல்லைக் குற்றி அரிசியாக்கிப் பொங்கி அப்பொங்கலை சூரிய பகவானுக்கு அர்ப்பணம் செய்து நன்றி செலுத்துவர்.

தையிலே அறுவடை செய்த நெல் உத்தராயனத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும். தெட்சணாயன காலத்திலேயே விதைப்பும் பயிர் வளர்ப்பும் நடைபெறுகிறது. அக்காலகட்டத்தில் நெல்லின் கையிருப்பு குறைவாகவிருக்கும். அடுத்த அறுவடை வரை உணவுத் தேவையைச் சமாளிக்கக் கை கொடுத்து உதவுவது பூலோக கற்பகதரு எனப்படும் பனை மரத்திலிருந்து கிடைக்கும் பிரயோசனங்களே. இதை நினைவூட்டுவதாகவே ஆடிப்பிறப்பன்று ஆடிக்கூழ் காய்ச்சிப் பகிர்ந்து உண்ணும் வழக்கம் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

நல்லது குழந்தைகளே. இப்போது ஆடிப்பிறப்பு விடுமுறை நாளல்லவென்றாலும், இம்முறை ஆடிப்பிறப்பு சனிக்கிழமை நாளாக அமைகிறது. ஆகவே முதல் நாளான வெள்ளிக்கிழமை நீங்கள் ஆனந்தம் ஆனந்தமாகத் தங்கத்தாத்தாவின் பாடலைப் பாடி மகிழலாம் தானே.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

— ஞானகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலியே பெரியவன்

— கு. குருபரன், வகுப்பு 9 A, யாழ். இந்துக் கல்லூரி —

சிவதருமர் என்றொரு பெரியவர் இருந்தார். அவர் தனது உடல் உழைப்பால் அறவழியில் நிறையப் பொருள் சம்பாதித்தார். தமது பெயருக்கேற்ப பல தருமங்களைச் செய்தார். பாடசாலைகள், வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள், அநாதைச் சிறுவர் விடுதிகள் போன்றவற்றிற்கு வாரி வழங்கினார். ஆலயங்களைப் புதுக்கி அங்கு வழிபாடுகள் ஒழுங்காக நடைபெறச் செய்தார்.

சிவதருமருக்கு இரண்டு பிள்ளைகள். யாக்கை நிலையாமையை உணர்ந்த சிவதருமர் தான் இறந்த பின்னர் பொருளை நல்ல வழியில் பயன்படுத்தக் கூடிய ஒரு பிள்ளைக்கே தனது சொத்துக்களைக் கொடுக்கத் தீர்மானித்தார்.

ஒருநாள் அவர் தமது இரு பிள்ளைகளையும் அழைத்து ஒவ்வொருவனிடமும் நூறு ரூபாவைக் கொடுத்தார். ''இந்த நூறு ரூபாவைக் கொண்டு வீட்டை நிறையச் செய்கிறவனுக்கே எனது பொருளை யெல்லாம் கொடுக்கப் போகிறேன் ''என்றார் சிவதருமர்.

மூத்தபிள்ளை நேரே சந்தைக்குப் போனான். அந்தப் பருவத்தில் மிகக் குறைந்த விலையில் சந்தையிற் கிடைத்த பொருள் தக்காளிப்பழம். கிலோ இரண்டு ரூபா என்றாலும் வாங்குவாரின்றிக் குவிந்து கிடந்தது. மூத்தவன் நூறு ரூபாவிற்கும் ஐம்பது கிலோ தக்காளிப் பழம் வாங்கி வந்து வீட்டை நிறைத்தான்.

இளையவன் ஒரு அழகான விளக்கும் அதற்குத் தேவையான மண்ணெண்ணையும் வாங்கி வந்தான், விளக்கை ஏற்றி வீடு முழுவதையும் பிரகாசம் அடையச் செய்தான்.

இருவரது செயலையும் பார்த்த சிவதருமர் சொத்துக்களை யெல்லாம் இளையவனுக்குக் கொடுத்தார். தனது சொத்துக்கள் பிரயோசனமான வழியில் செலவழிக்கப்படும் என்ற நம்பிக்கையில் சிவதருமர் சந்தோஷமாக வாழ்ந்து சிவபதமடைந்தார்.

# இந்து சமயம் - ஆண்டு 13

# வினா - விடை

1. வித்தியா தத்துவங்கள் எவை?
காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பிரகிருதி

2. சஞ்சிதம் என்றால் என்ன?
சஞ்சிதம் என்பது பல பிறவிகளிலும் நாம் செய்த வினைத்தொகுதி - பழவினை,

3. ஆகமங்களின் சாரமாய் அமைந்தது யாது?
சைவ சித்தாந்த சாத்திரங்கள்

4. அகச்சந்தான குரவர்கள் யார்?
திருநந்திதேவர், சனற்குமாரமுனிவர், சத்திய ஞானதரிசினிகள், பரஞ்சோதி முனிவர்.

5. வேதாங்கங்கள் என்றால் என்ன? அவைகள்யாவை?
வேதத்துக்கு அங்கமாக விளங்குகின்ற நூல்களை வேதாங்கங்கள் என்று கூறுவர். அவை சிட்சை, வியாகரணம், நிருக்கம், சோதிடம், கல்பம், சந்தஸ் என ஆறு வகைப்படும்.

6. ஆதிசங்கரர் சக்திவழிபாட்டை மேற்கொண்டு அம் மதத்தைப் பரப்பிய சான்றோரில் ஒருவராக விளங்கி நின்றார் என்பதனை எடுத்துக் காட்டும் நூல்யாது?
ஆனந்த லஹரி

7. முதலாழ்வார்கள் என்று போற்றப்படும் மூவர் யார்?
பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்

8. எழுவகைத் திட்சைகள் எவை?
நயனம், பரிசம், மானசம், வாசகம், சாத்திரம், யோகம், ஒளத்திரி.

9. உற்சவம் என்ற சொல்லின் பொருள் யாது?
மேலான பஞ்சகிருத்தியம் என்பது அதன் கருத்தாகும்.

10. திருவாவடுநுறை ஆதீனத்தைத் தாபித்து முதற் குருவாக விளங்கியவர் யார்?
நமச்சிவாய தேசிகர்.

11. பகவத்கீதை கூறும் அடிப்படைத் தத்துவம் யாது?
அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலை நாட்டல்

12. அட்ட வீரட்டத்தலங்கள் எவை? அங்கு நடைபெற்றன யாவை?
   1) திருக்கண்டியூர் — பிரமனது சிரம் கொய்த தலம்
   2) திருக்கோவலூர் — அந்தகாசுரனைக் கொன்ற தலம்
   3) திருவதிகை — திரிபுரத்தையெரித்த தலம்
   4) திருப்பறியலூர் — தக்கன் சிரசைத் தடிந்த தலம்
   5) திருவிற்குடி — சலந்தரனைத் தலையரிந்த தலம்
   6) திருவழுவூர் — யானையையுரித்த தலம்
   7) திருக்குறுக்கை — மன்மதனை யெரித்த தலம்
   8) திருக்கடவூர் — இயமனையுதைத்த தலம்

13. இறைவனின் ஐந்து திருமுகங்களையும் அதன் திசையையும் குறிப்பிடுக.
   1. கிழக்கு நோக்கிய முகம் ஈசுவரனுடையது — தத்புருஷம்
   2. தெற்கு நோக்கிய முகம் ருத்ரனுடையது — அகோரம்
   3. மேற்கு நோக்கிய முகம் பிரம்மாவினுடையது — சத்யோஜாதம்
   4. வடக்கு நோக்கிய முகம் விஷ்ணுவினுடையது — வாமதேவம்
   5. உச்சியில் விளங்கும் முகம் சதாசிவனுடையது — ஈசானம்

14. ஆலயத்தில் வழிபடப்படும் ஐந்து வகை இலிங்கங்கள் எவை?
   1. சுயம்பு லிங்கம் — பிறர் எவரும் உருவாக்காமல் தானாகவே உருவாகியது.
   2. காணலிங்கம் — விநாயகர், முருகன் போன்ற தெய்வங்களால் உருவாக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தைவிகலிங்கம் — பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களால் உருவாக்கப் பட்டது

4. ஆரிடலிங்கம் — தவநெறியில் நிற்போரான ரிஷிகள் மகான்களால் உருவாக்கப்பட்டது

5. மானிடலிங்கம் — மனிதர்கள் இறையருள் முயன்று உருவாக்கியது

15. சாமவேத சங்கிதைகள் மூன்று தருக?
கௌதுமம், ராணயணீயம், சைமினியம்

16. சிவனடியாரை வழிபட்டு முத்தியடைந்த நாயன் மார்கள் ஐவரின் பெயரைக் குறிப்பிடுக.
திருநீலகண்ட நாயனார்
இயற்பகை நாயனார்
இளையான்குடிமாற நாயனார்
மெய்ப்பொருணாயனார்
விறன்மிண்ட நாயனார்
அமர்நீதி நாயனார்

17. மெய்கண்ட தேவரின் தாய்தந்தையர் பெயர் யாது?
தந்தையார் — அச்சுதகளப்பாளர்
தாயார் — மங்களாம்பிகை

18. அறுபத்து மூன்று நாயன்மார்களின் பெருமையைக் கூறும் சித்தாந்த நூல் யாது?
திருக்களிற்றுப்படியார்

19. திருமந்திரத்தில் ஐந்தாம் தந்திரம் எந்த ஆகமத்தின் சாரமாகும்?
வாதுள ஆகமத்தின் சாரம்

20. நைமித்திய பூசை பற்றிச் சாத்திரங்கள் கூறுவது யாது?
நித்திய பூசைகளிலே ஏற்படும் குறைபாடுகளை நைமித்திய பூசையாகிய திருவிழாக்கள் தீர்க்கின்றன.

21. சாம்பவதீட்சை என்பது யாது?
தீட்சை பெறாதவர், தீயோர் யாவரும்விழாக்காலங்களில் உற்சவமூர்த்திகளைத் தரிசிப்பதனால் ஏற்படுவது சாம்பவ தீட்சை ஆகும்.

22. ஆன்மா ஒன்றே உள்ளது. அதைத் தவிர்த்து வேறு ஒன்றுமே இல்லை. காணும் உலகமெல்லாம் மாயைத் தோற்றமே என்று கூறியவர் யார்?
சங்கரர்

23. சின் முத்திரையின் பொருள் யாது?
பாசத்திலிருந்து ஆன்மா விடுதலை பெற வேண்டுமாயின் பதியோடு சேர வேண்டும் என்பதே அம் முத்திரையின் பொருளாகும்

24. திரயீ என்றால் என்ன?
இருக்கு, யசுர், சாமம் ஆகிய முதல் மூன்றுவேதங்களும் திரயீ எனப்படும்

25. ஒன்பதாந் திருமுறையைப் பாடிய நூலாசிரியர்களின் தொகையாது?
ஒன்பது

From Page 16

dually and to lead us to the great everlasting happiness. ie. 'Veedu' or 'Moksa'. **Explaining what is dharma at first and showing the way to earn wealth in the right way to discharge that dharma and training us in rigorous discipline till we get perfection in meeting the particular pleasures and finally destroying the minor pleasures and showing us the permanent happiness of salvation constitute the purpose of religion.**

Salvation is the state at which the soul freed from bonds is full of happiness. Religion is meant to make this state available to us. Permanent happiness will result only if we forsake chasing ephemeral pleasures obtained through the senses. Certain codes of conduct are necessary to rid ourselves of the sensory comforts and to constitute our social life to help us get permanent happiness. Religion which has deliverance as the ideal lays down the rules of dharma. That is what great men meant whenever they spoke of dharma.

We have become so owing to the power of Maya (illusion) that we want only wealth and minor pleasures. Though in reality, wealth and pleasure are not necessary for a good life, great men have added these to the aspects of life considering human nature. If we cultivate dharma from the beginning as a basic instinct, then wealth and pleasure cannot spoil us. Dharma was listed as the first aspect because it would keep under control wealth and pleasure. Even as we desire for wealth and pleasure we must also yearn for dharma. Then it will divest wealth and pleasure of their poison. Ultimately it will lead us to salvation for which also we should yearn.

## திரிவேணி சங்கமம்

கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் சந்திக்கும் இடம். வட இந்திய உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள அலகாபாத் எனத் தற்காலத்தில் அழைக்கப்படும் பிரயாகை நகரில் உள்ளது. இந்துக்களுக்கு மிகப் புனிதமான இடங்களுள் ஒன்று.

சரஸ்வதி கண்ணுக்குப் புலப்படாத நிலத்தின் கீழுள்ள ஒரு நீரோட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Religion and the four - fold aspects of life

Virtuous deed*('Aram' in Tamil or 'Dharma' in Sanskrit), Material wealth ('Porul' in Tamil or 'Artha' in Sanskrit), Pleasure ('Inpam' in Tamil or 'Kama' in Sanskrit) and Salvation ('Veedu' in Tamil or 'Moksa' in Sanskrit) are the four-fold aspects of life. These four aspects have been listed as the wants of a person for a good life.

What do we want in life? In an imper-fect stage we want material wealth ie. 'Porul'. But material things gives us only ephemeral happiness and deprives us of permanent bliss. Therefore material wealth is actually a nuisance.

What we really want is to be happy without any wants Happiness is of two kinds. One is temporary. The other is endless. The one that brings temporary happiness is pleas-ure (or 'inpam' or 'kama') These words denote all kinds of worldly desires. The kind of happiness that remains forever is the one known as salvation (or 'veedu' or 'moksa'). We hanker after temporary pleasures because we do not know the greatness of eternal bliss. What we must desire for is to attain salvation ('veedu' or 'moksa')

In day-to-day life what is wanted is pleasure, the third aspect. One is happy when he gets good food. That is pleasure. If one gets a good job, that is also a kind of pleasure. Listening to others praising us is also a kind of pleasure But these pleasures are momentary. We get pleasures through wealth which may be of kind or of money, or of house, or of persons. Wealth is the basis for pleasure. We enjoy this pleasure for a period of small duration. Then the search for further pleasure overtakes us.

The everlasting great happiness which makes one not to feel the want of anything more, is salvation (or 'veedu' or 'moksa'). 'Veedu' in Tamil means Home or Liberation. The body - the flesh - in which we live in is actually a prison. Our real home is salvation which is eternal bliss We should leave this prison and be in our own real home God has imprisoned us in the body as punishment for our past sinful actions. If our deeds are virtuous, He will condone our crimes and reduce our sentence and release us. We should not enhance our period of prison life by committing more sins while in prison We should endeavour to reach Godhead which is the real home. The home is the abode of endless happiness, the happiness that is not lacking in matter of time, place and things

The aspect of life that is listed first is Virtuous Deed ('Aram' or Dharma'). In Tamil we are first told, "Desire to perform Virtuous Deed" (அறஞ் செய விரும்பு.) Though 'Aram' or 'Dharma' means doing good, the word is construed as equivalent to 'giving'. Beggars implore us to perform dharma. We usually say 'daana-dharma'. In Tamil. philanthropic institutions are termed 'Arakattalai'. In this sense, giving material things to others in need is Dharma. How can we get the things which we can give like this? Only if we had given things to others in previous birth, that action would result in our having enough to give away in this birth. Giving away material things is not the only purpose of Dharma. Getting enough material things is also the purpose of dharma. Just as wealth is the cause of pleasure, dharma is the cause of wealth.

The dirt in our minds will be removed and we will get permanent happiness if we dedicate ourselves to doing dharma with the thought "I do not want wealth; Let the Almighty bestow what He thinks fit". The dharma which gives wealth will itself become the cause of attaining salvation. Through this it also becomes the cause of pleasure and salvation when it is done without desiring for results. If we give by way of charity we get material in return. With that material we can repeat the charitable act. Now it is wealth itself which is the cause of charity. Pleasure alone never gets fulfilled nor is it the cause of other things. Like the water poured on hot sand, pleasure exhausts itself, and failing to last, ceases to be the cause of other actions and destroys the charitable instinct, wealth and salvation.

Still it is not possible to give up all pleasures instantaneously. Religion is there to help us in getting free of pleasures gra-

(Turn to Page 15)

* There is no single word equivalent in English for 'Aram' or 'Dharma'. Virtue, Duty and other such words do not really cover the full import of either 'Aram' or 'Dharma'.

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Jaffna - Saiva Paripalana Sabai of 450, K. K. S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna. on 28-06-1999. (Fullmoon day)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org